**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.8/2019**

**2025 ஆம்** வருடம் ஆகஸ்ட் மாதம் 22 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | ஜாதி | : | |
| த.பெ | : | முத்துச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 55/2025 |
| தேதி | : | 22.08.2025 | | | |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு விபரங்கள் உங்களுக்கு அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வண்டி பாதை உள்ளதால் பாதை கேட்டு பரிகாரம் தாக்கல் செய்துள்ளேன். யாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் நாகேந்திரன் என்பவர் மீது வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி நாகேந்திரன் இந்திய ராணுவத்தில் பணியை முடித்துவிட்டு தற்போது சொந்த ஊரில் விவசாயம் செய்கிறார் என்றால் சரிதான். சரவணன் என்பவருக்கு உங்களுடைய நிலமான சர்வே எண்.1339/5A2 எந்த வருடத்தில் கிரையம் செய்து கொடுத்தீர்கள் என்றால் 1991 ல் கிரையம் செய்து கொடுத்தேன். மேற்சொன்ன சர்வே எண்ணுக்கு விஸ்தீரனம் என்ன என்றால் தோராயமாக 93 செண்ட் இருக்கும். உங்களிடம் சரவணம் 1991 ல் கிரையம் பெற்று அந்த இடத்தை 2016 ல் அவர் விற்கும் வரை அவர் தான் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரிதான்.

சரவணன் உங்களிடம் கிரையம் வாங்கிய மேற்சொன்ன இடத்தில் 80 தென்னை மரங்கள் இருக்கிறது என்றால் சரிதான். நீங்கள் கிரையம் கொடுக்கும் போதே தென்னை மரம் இருந்ததா என்றால் தென்னை மரம் இருந்தது, காய்க்கிற நிலையில் இருந்தது. நீங்கள் சரவணனுக்கு எழுதிக்கொடுத்த மேற்சொன்ன கிரைய பத்திரத்தில் நிலத்தை மட்டும் தான் சொல்லியுள்ளீர்கள், தென்னை மரங்கள் கிரையம் செய்து கொடுத்த போது இருந்ததாக நீங்கள் சரவணனுக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. சர்வே எண்.1339/5A2 விற்கு தெற்கு புறத்தில் இரண்டு வரிசை தென்னை மரங்கள் உத்தேசமாக 40 மரங்கள் உள்ளது என்றால் தென்னை மரங்களுக்கு நடுவில் பாதை உள்ளது. ஒரு தென்னை மரத்திற்கம், மற்றொரு தென்னை மரத்திற்கும் உள்ள இடைவெளி 21 அடி இருக்கும்.

உங்களுடைய கிரைய பத்திரத்தில் பாதை உள்ளதை சொல்லியுள்ளீர்கள், ஆனால் அதற்கு எதுவாக மரங்களை அப்புறப்படுத்த எந்த வித முயற்ச்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதியில் தென்னை மரங்களின் வயது 35 வருடம் இருக்கும் என்றால் ஞாபகமில்லை. பெத்தனசாமி ஓடையில் இருந்து சர்வே எண். 1339/5A2 க்கு சென்றடைய

இடையில் நிலங்கள் உள்ளது என்றால் சரியல்ல. பெத்தனசாமி ஓடையில் இருந்து சர்வே எண். 1339/5A2 க்கு சென்றடைய வசதியாக சர்வே எண். 1340/1A என்ற இடத்தில் உங்களுடைய உறவினர் மொட்டையாண்டி என்பவரிடம் 1997 ல் 1 3/4 செண்ட் இடத்தை சரவணன் கிரையம் பெற்றார் என்றும், சரவணன் கிரையம் பெற்ற 1 3/4 செண்ட் இடத்தில் ஒரு கேட் அமைத்து, அந்த கேட் வழியாக சர்வே எண்.1339/5A2 விற்கும், அதன் வடபுறம் உள்ள சர்வே எண்.1339/5A1 க்கும், அதற்கு வடபுறம் உள்ள சரவணனுக்கு பாத்தியப்பட்ட இடங்களுக்கு சென்றுவர மேற்படி பாதையை பயன்படுத்தினார் என்றால் சரிதான் என்று சாட்சி சாட்சியம் அளித்துவிட்டு, பின்னிட்டு சரியல்ல என்று சாட்சியம் அளிக்கிறார்.

சர்வே எண். 1340/1A ல் உள்ள கேட்டை சரவணன் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். சரவணன் கேட் அமைக்கும் போது நீங்கள் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான், சரவணன் அந்த கேட்டிற்கான சாவியை என்னிடம் கொடுத்திருந்தார். மேற்படி சரவணன் அமைத்த பாதையில் மேற்சொன்னபடி அவருடைய நிலங்களுக்கு செல்வதற்கு மட்டுமே அந்த பாதையை பயன்படுத்தினார் என்றும், அந்த பாதையை நீங்கள் சர்வே எண். 1341/1B2, சர்வே எண். 1341/3B ஆகிய நிலங்களுக்கு செல்ல பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. சரவணன், பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் உங்களுடைய நிலத்திற்கு செல்வதற்கு பாதை, பாத்தியம் உள்ளதாக குறிப்பிட்டு அவர் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் நீக்கி எழுதியுள்ள விபரம் எனக்கு 2019 ஆம் ஆண்டு தான் தெரியும்.

சர்வே எண்.1339/5A2 க்கு வடக்கிலும், தெற்கிலும் உங்களுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பட்டிவீரன்பட்டி காவல் நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்தீர்கள் என்றால் 2019 ஆம் ஆண்டு ஒரே ஒரு முறை தான் புகார் கொடுத்தேன். மேற்சொன்ன புகாரை நாகேந்திரன் என்பவர் மீது யார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இந்த வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor